★ விலைரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஐப்பசி 5 முஹறம் 15 இதழ் 251

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-10-83

## தமிழ் தீவிரவாதிகள் எவரும் தமிழகத்தில்
# ஆயுதப்பயிற்சி பெறவில்லை
### தலைமைச் செயலர் மறுப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழ்த் தீவிரவாத இளைஞர்கள் தமிழ்நாட்டில் ஆயுதப் பயிற்சி பெறுவதாக இலங்கையில் வெளிவந்த செய்தியை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே. சொக்கலிங்கம் மறுத்துள்ளார்.

தமிழ்நாட்டின் எந்தவொரு இடத்திலும் தீவிரவாதிகள் எவரும் ஆயுதப்பயிற்சிபெறவில்லை என்பதை திட்டவட்டமாக திரு. சொக்கலிங்கம் தெரிவித்தார்.

தமிழக அரசின் நிர்வாகத் துறையில் அதிஉயர் பதவியை வகிக்கும் திரு. சொக்லிங்கம் நேற்று நிருபர்கள் மத்தியில் இதுதொடர்பாக பேசுகையில்,

''இலங்கையில் தமிழ் ஈழம் பிரிக்கும் வடபகுதி தமிழ்த் தீவிரவாதிகள் தமிழ் நாட்டில் ஆயுதப்பயிற்சிகளைப் பெற்று வருகிறார்களென இலங்கையில் சில பத்திரிகைகள் அண்மைக்

(10ம் பக்கம் பார்க்க)

## ● சென்னையில் 3 நாட்கள் கூடிய 'பொலிட்பீரோ' முடிவு
# கூட்டணி தீவிர இயக்கங்களை
# இணைத்து இயங்க முயற்சி

### அவசரகாலச்சட்ட நீடிப்பு அவசியமற்றதென்கிறார் அமிர்

(சென்னை)

ஒரு இலட்சியத்துக்காகவே போராடிவரும் தமிழ் தீவிரவாத இயக்கங்கள் உட்பட அனைத்து இயக்கங்களையும் ஐக்கியப்படுத்தி இயங்கச் செய்வதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்வதென தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகார சபை ('பொலிட்பீரோ') முடிவு செய்துள்ளது!

சென்னையில் கடந்த மூன்று தினங்களாகக் கூடி கூட்டணியின் எதிர்காலம் குறித்து விரிவாக ஆராய்ந்த கூட்டணி அதிகாரசபை இறுதியில் மேற்கண்டவாறு முடிசெய்தது.

அதிகாரசபையின் இந்த முடிவைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் அறிவித்தார்.

கூட்டணியின் முடிவுகள் பற்றி நிருபர்களுக்கு எடுத்துக் கூறிய திரு. அமிர்தலிங்கம், இலங்கையில் ஜனாதிபதியால் கூட்டப்பட்ட தமிழர் பிரச்னை தொடர்பான வட்டமேசை மாநாடு பற்றி கருத்து வெளியிடுகையில்,

''தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்ளாத மாநாட்டில் தமிழர்கள் பிரச்னையைத் தீர்க்கும் எந்த முடிவையும் எடுக்கமுடியாது'' என்றார்.

இந்த மாநாட்டை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்ததை வரவேற்ற திரு. அமிர்தலிங்கம், கூட்டணியும் கலந்துகொள்ளச் செய்யவேண்டும் என்று கேட்டதற்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு நன்றி தெரிவித்தார்.

''அவசரகாலச்சட்டம் நீடிப்

[10ம் பக்கம் பார்க்க]

### யாழ். கல்லூரி வளவுக்குள் 'ரோணியோ' யந்திரம்

(மாவிட்டபுரம்)

வட்டுக்கோட்டை யாழ். கல்லூரியில் கடந்த 15-ம்திகதி கொள்ளையடிக்கப்பட்ட 'ரோணியோ' யந்திரம்நேற்றுக் காலை கல்லூரி வளவுக்குள் அநாதரவாகக்கிடந்தது.

காங்கேசன்துறை பொலிஸாருக்கு இத்தகவல் அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நடத்தினர் எவரும் இது சம்பந்தமாகக் கைதாகவில்லை.

## 'வடக்கில்புலி; கிழக்கில் நாகம் அவசரகாலச்சட்டம் அவசியம்'
### பாராளுமன்றத்தில் பிரதமர்

(கொழும்பு)

வடக்கில் புலிப்படையும் கிழக்கில் நாகப்படையும் தற்போது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. இந்நிலையில் அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்தும் அமுலில் வைத்திருக்க வேண்டியது மிகஅவசியமாகும்'' என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதம மந்திரி திரு. ஆர்.

(10ம் பக்கம் பா

## ★ பலாலி முகாமில் நடந்த சம்பவம்:
# தன்னைத்தானே சுட்டு விமானபடைவீரர் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

கடமை நேரத்தில் நித்திரையாக இருந்த விமானப்படை வீரரை, சார்ஜன்ட் தட்டி எழுப்பி எச்சரிக்கைசெய்தார். மனமுடைந்த விமானப் படை வீரர் சார்ஜ்ன்ட் முன்னிலையிலேயே தன்னைத் தானே சுட்டுக்கொண்டார்! இவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

பலாலி விமானப்படை வீரர் மரணம் குறித்து நடைபெற்ற மரணவிசாரணையில், விமானப் படையைச் சேர்ந்த சார்ஜன்ட் ஜெயந்தா விஜய சேகராவின் சாட்சியத்தில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதியில் மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்ஸிஸ்

(10ம் பக்கம் பார்க்க)

# மரத்தில் தொங்கிய வயோதிபர் சடலம்

(மட்டுவில்)

அடித்துக் கொலைசெய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வயோதிபர் ஒருவரின் சடலம் மரத்தில் கட்டி தொங்கவிடப்பட்டிருந்தது.

இதுசம்பந்தமாக புலன் விசாரணை நடத்திய சாவகச்சேரிப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். மேலும் மூவரை பொலிசார் தேடிவருகிறார்கள்.

கைதடி நுணுவில் குமரகுருபரன் வாசிகசாலைக்கு அருகாமையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. மகேஸ் மயில்வாகனம் விஜயரத்தின (72 வயது) என்பவரே கொலைசெய்யப்பட்டவராவர். (கு)

### பல்கலைக்கழக மாணவரின் எதிர்காலம் திங்களன்று முடிவு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களும் புதிதாக அனுமதிபெற்ற மாணவர்களும் தமது எதிர்காலம் குறித்து சில முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்காக நாளை மறுதினம் திங்

(10ம் பக்கம் பார்க்க)

### இன்று தி.மு.க. சட்டமன்ற தலைவர் தெரிவு

(சென்னை)

தி. மு. க. சட்டமன்றஉறுப்பினர்கள் தமது சட்டமன்றத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்

(10ம் பக்கம் பார்க்க)

JCC Ltd. (யாழ்ப்பாணம் கட்டிட நிர்மாண
கட்டிட ஆலோசனை ஸ்தாபன
கட்டிடப் பொருட்கள் விற்பனைப் பிரிவு)

உரும்பராயில் உங்களை அன்புடன் வரவேற்கிறது!

★ கட்டிடப் பொருட்கள் ★ மின்சார, தண்ணீர் விநியோக உபகரணங்கள்
★ வீட்டு அலங்கரிப்பு தீந்தை வகைகள் ★ கார் தீந்தை வகைகள்
★ அத்தியாவசிய உதிரிப்பாகங்கள் ★ பிளாஸ்ரிக் வீட்டுப் பாவனைப்பொருட்கள்

இன்னும் பல முக்கிய பொருட்களை
யாழ். நகர விலைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்.

இவை தவிர கட்டிட படம் வரைதல், மதிப்பீடு, கட்டிட அமைப்பு, கட்டிட பொருட்கள் விநியோகம் என்பவற்றிற்கு எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்.

எமது கிராம, சுற்றுவட்டார கிராமங்களின் வசதியை முன்னிட்டு வெகு விரைவில் மருந்துக் கடையும் [PHARMACY] எமது கிராமங்களில் கிடைக்காத பலவித பொருட்கள் நிரம்பிய காட்சிக் கூடமும், விற்பனைக்களமும் ஆரம்பிக்கப்படஉள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் இதயம் நிரம்பிய அன்பையும் இனிமையான ஆதரவையும் நாடும்

JCC LTD. உரும்பராய் சந்தி,
உரும்பராய்.

[9454]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு முன்பாக மூன்று பரப்புக் காணியும் கல்வீடும், கடையும் விற்பனைக்குள்ளன. என். சோதிலிங்கம் 'சிவஸ்தான்' பருத்தித்துறை வீதி, தையிட்டி, காங்கேசன்துறை. 9370

நல்ல நிலையில் உள்ள ரேுணியோ மெசின் ஒன்று விற்பனைக்கு உண்டு. ந. அரசன், மாணவர் கலாசாலை, கரவெட்டி. 9421

பேஜோ 403. 3 ஸ்ரீ 8000 தொடர் இலக்க காரும் C B 125 10 ஸ்ரீ 5000 தொடர் இலக்க மோட்டார் சயிக்கிலும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் நேரில் பார்வையிடலாம். S. உலகநாதன் (மாஸ்டர்) கொக்குவில்மேற்கு கேணியடி, கொக்குவில். 9440

சிசில் றிபிறிஜிறேற்றர் (Refrigerater) நல்ல பாவனைக்குகந்த நிலையில் உண்டு. விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். S. வேலாயுதம், சுழிபுரம்கிழக்கு, சுழிபுரம். 9419

நாவற்குளி ஸ்டேசனிலிருந்து கால் மைல் தொலைவில் கண்டி ரோட்டில் கிணற்றுடன் கூடிய இரண்டு, நான்கு பரப்புகாணிகள் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு கொள்க: பாலகுரு சாமிசர்மா, குடியிருப்பு, சுளிபுரம். 9428

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள வெள்ளைநிற 8 ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள பேர்ஜோ 404 கார் விற்பனைக்குண்டு. இதில் சொனி கசெட் றேடியோவும் மற்றும் பல பொருட்களும் பொருத்தப்பட்டுள்ளன. விபரங்கட்கு: M. மாணிக்கவாசகர், ஸ்ரீமத், பொற்பதி வீதி, கொக்குவில். 9414

அரியாலை மணியந்தோட்டத்திற்கண்மையில் 4 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்கட்குதொடர்பு கொள்க. Navatkuli Medical Centre (Opposite Railway Station) Navatkuli, Kaithady 9448

புத்தம் புதிய இன்டெசிற் ஹிருண்டோ (INDESIT-HIRUNDO) சலவை யந்திரம். (Washing Machine) விலைரூபா 9000/-. 24, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 9449

## வகுப்புக்கள்

Pharmacists External Examination யாழ்ப்பாணத்தில் ஆரம்பவகுப்பு/மீட்டல் வகுப்பு வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும். தொடர்புகொள்ளவும். (முத்திரை ஒட்டிய விலாசத்துடன் கூடிய கடித உறையுடன்) முகவரி; Pharmed Academy, 562-A, Aluthmawatte Road, Colombo-15, 9444


# NEW BECON

(பழைய நொதேண்)

ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக

யாழ்ப்பாணம்

## G.C.E. (A/L) 84/85

கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள்

பொருளியல் - கண்ணன், அளவையியல்-சுதாகர்
கணக்கியல் - மரியதாஸ், வர்த்தகம் - செல்வா,
இந்துநாகரீகம்-அருள்நங்கை, தமிழ்-சிவலிங்கராஜா

ஆரம்பம் 24-10-83 காலை 8 மணி

பௌதிகவியல் - விமல் ராஜ்

பகல்நேர வகுப்பு ஆரம்பம் 24-10-83

சடப்பொருளியல் காலை 10-15 – 11-15

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில்

9445


# கேள்விப்பத்திர அறிவித்தல்

1. வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மண்டைதீவில் அமைந்துள்ள மீன்தூள் ஆலையில் மூன்று தொடர் கறுஜ்கள் (3 Attached Garages) அமைப்பதற்கான கேள்விகள் ரூபா.100,000/- அல்லது இதற்கு மேற்பட்ட தொகைக்கான வேலைகளுக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

2. கேள்விப் பத்திரங்களை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ. 25/-ஐக் கீழ்க்காணும் விலாசத்தில் செலுத்தி 29-10 83 சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்வதோடு வேண்டிய இதர விபரங்களையும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,

வடமாகாணம் கடற்றொழிலாளர்,
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
25, முன்வீதி, யாழ்ப்பாணம்.

9453

## கல்வி

G. S. Q., G. A. Q. 1984 துரித மீட்டல் வகுப்புகள் 22—10—83 முதல் ஆரம்பமாகின்றன. J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 9410

1st in Laws 1984 Aug. புதிய வகுப்புகள் ஆரம்பம் 24—10—83 J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 9411

ஒரு மாத வெல்டிங், வயரிங், மோட்டர் மெக்கானிசம் வகுப்புகள் நடைபெறுகின்றன. பயிற்சி முடிவில் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 9412

## தேவை

சகலவகை இயந்திரங்களுடனும் கூடிய அச்சகம்தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்க: க. விமலேஸ்வரன், ''விமலாஸ்'', சாவகச்சேரி. 9374

மணமகள் தேவை: சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த, புகைத்தல், குடி இல்லாத 28 வயதுடைய எஞ்ஜினியர் மகனுக்கு டாக்டர் மணமகள் தேவை. குறிப்பும் முழு விபரமும் முதற் கடிதத்தில். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 9406, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 9406

கிளிநொச்சியிலுள்ள சில்லறைக் கடைக்கு தெளிவாக எழுதக்கூடிய சிட்டை லிகிதர் உடன் தேவை. சகல சான்றுப் பத்திரங்களுடன் 10-00—4-00 மணிக்கிடையில்நேரில்வரவும். 104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9457

புதிய பாவித்த வீடியோ கசற், ரெலிவிசன், வீடியோ டெக் பாவிக்க முடியாத ரெலிவிசன் என்பனவும் நியாய விலையில் வாங்கப்படும். விலை குறித்து முழு விபரங்களுடன் விண்ணப்பிக்குக. விளம்பர இல: 9458, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9458

## சேவை

மிகப் புதிய தமிழ் சினிமா படங்கள் வீடியோ, பகவதிபுரம் ரெயில்வே கேட், சிவப்பு சூரியன், பகடைபன்னிரண்டு, தண்டிக்கப்பட்ட நியாயங்கள், பலப்பரீட்சை யாவும் தரம் (1) பிரதிகள் - துர்க்காஸ், சுன்னாகம். 9452

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9404

## அறிவித்தல்

# மின் தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசியதிருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 23-10-1983-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 3 00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சி.வீ.கே.சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-10-1983 9451

# அவசரகாலத்தை நீடிக்கும் சட்டமூலம் நிறைவேறியது

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவாக 130 பேர் வாக்களித்தனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது.

கலவான எம். பி. திரு.சரத் முத்தெட்டுவேகம வாக்களிப்பின் போது சபையில் இருக்கவில்லை.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன வாக்களிப்பின் போது நடுநிலைவகித்தார்.


# HOTEL GNANAMS

யாழ். நகரில் . . . . . .

- நவீன வசதிகள்
- குளிரூட்டிய, குளிர்சாதனம் அற்ற அறைகள்
- மேல்நாட்டு உள்நாட்டு உணவுகள்
- விசாலமான மண்டப வசதிகள் (திருமணவைபவம், விருந்துபசாரம், கலந்துரையாடல்)
- WEEK DAY :-
  Executive Lunch Rs. 20/-
  Take Away Packets Rs. 20/-
  WEEK END :-
  Buffet Lunch or Dinner Rs. 30/-
- அமைதியான சூழ்நிலை
  இவையனைத்தையும் வழங்குவது

## ஹோட்டல் ஞானம்ஸ்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 22082


## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



றெபெக்கா யோண்பிள்ளை

பிறப்பு: 22-01-1904 இறப்பு: 22-10-1982

அன்னாரின் ஆத்மசாந்திக்காக மன்றாடும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.
18, கண்டி ரோட், யாழ்ப்பாணம். (9427)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி செல்லம் சின்னத்துரை

தோற்றம்: 1910 மறைவு: 02-11-82

திதி: 22-10-83

துந்துபிசேர் ஐப்பசியில் தூய பிரதமை நாள்
சிந்தை கொள்ளும் செவ்வாயில் செல்லமிவள்-
நிந்தைமிகு, வையத்து வாழ்வொழித்து வளமார்
பரணிதனில், தெய்வத்தாள் உற்றுள் தெளிந்து.

தோன்றத்துணையாயிருந்து தோன்றாத்துணையாகி விட்ட அன்புத்தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக

பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

டிப்போ அருகாமை, பலாலி வீதி, கோண்டாவில்.

(9342)

# பாக். ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த துப்பாக்கி ஹெலிகாப்டர்கள்!

## அரசியல் கட்சிகளுடன் ஹக் பேச்சுவார்த்தை

**இஸ்லாமாபாத், அக் 21**

**பாகிஸ்தானில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்க துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

பாகிஸ்தானின் தென் பிராந்தியத்திலுள்ளசிந்து மாகாணத்தில் இடம்பெற்றுவரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்காகவே ராணுவச் சட்டத்தின்கீழ் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

இத்தகைய ஹெலிகாப்டர்களினல் பல கிராமங்கள் தாக்குதலுக்குள்ளாகியிருப்பதாக பாகிஸ்தானில் தடைசெய்யப்பட்டுள்ள தேசியக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர்கள் கடந்த புதன்கிழமை முதல் தாக்குதல் நடத்தி வருவதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

அதேவேளை பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியா-வுல்-ஹக் பாகிஸ்தானிலுள்ள சில அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறார்.

பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்துமாறும், அங்கு பொதுத்தேர்தலை நடத்துமாறும் கோரி அந்நாட்டின் தேசியக் கட்சி உட்பட 9 எதிர்க்கட்சிகள் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருவது தெரிந்ததே. (வெ)

# ரயில் விபத்து: 13 பேர் பலி

**புதுடில்லி, அக். 21**

பஞ்சாப்பில இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் 13 பேர் பலியானார்கள், 109 பேர் காயமடைந்தனர். ரயில் தடம் புரண்டதாலேயே இவ்விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)


★ ட்ரான்ஸ் வேர்ல்ட் ஏயர் லைன்ஸ்
★ சவூதி அரேபியன் ஏயர் லைன்ஸ்
★ எத்தியோப்பியன் ஏயர் லைன்ஸ்
★ மலேசியன் ஏயர் லைன்ஸ்

ஒழுங்குகள்

உங்கள் சகல விமானப் பயண
தேவைகளுக்கும்
இப்பொழுது
யாழ்ப்பாணத்திலேயே
தொடர்பு கொள்ள முடியும்

மெர்க்கன்டைல் ட்ருவர்ஸ்
(சிலோன்) லிமிட்.,

11/8, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22321 9430


# சிறுபான்மையினருக்கு அரசு பாதுகாப்பளிக்க வேண்டும்

## இந்திரா காங்கிரஸ் தீர்மானம்

**புதுடில்லி அக். 21**

''நாட்டின் ஒற்றுமையைக் கருதிச் சிறுபான்மையினருக்கு மத்திய அரசு பாதுகாப்பளிக்க வேண்டும்.''

இவ்வாறு கோரும் அரசியல் தீர்மானமொன்று பம்பாயில் கூடிய அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிப்பதின் மூலமே நாட்டில் சமயசார்பற்ற கட்சிகளைப் பாதுகாக்கமுடியுமென்றும் இத்தீர்மானத்தில் தெரிவிக்கபட்டுள்ளது.

சிறுபான்மையினருக்கு வேலைவாய்ப்பில் போதியளவு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்றும் இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள், சீக்கியர்கள் போன்ற சிறுபான்மையினரின்

(8ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பலத்த மழை

(மன்னார்)

நீண்ட வரட்சிக்குப்பின் நேற்று மன்னாரில் பலத்த மழை பெய்தது. இதனல் விவசாயிகள் பெரும் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மன்னாரில் தமிழ்த் தந்திகளை ஏற்கத் தயக்கம்!

(மன்னார்)

மன்னார் தபால்நிலையத்தில் வெளியூர்களுக்கு தமிழில் அனுப்பப்படும் தந்திகளை ஏற்பதற்கு அதிகாரிகள் தயக்கம் காட்டி வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறன. குறிப்பாக கண்டி, கொழும்பு போன்ற இடங்களுக்கு அனுப்பப்படும் தந்திகளை ஏற்றுக் கொள்வதற்குத் தயக்கம் காட்டப்படுகிறது.

வெளியூர்களில் தந்திகளை தமிழில் எழுதுவதற்கு அதிகாரிகள் இல்லாததாலேயே மன்னார் தபால் நிலையத்தில் வெளியூர்களுக்கு தமிழில் அனுப்பப்படும் தந்திகளை அதிகாரிகள் ஏற்கத்தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

## 1,000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

160 கிறாம் கசிப்பு வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்டவழக்கில், எதிரிக்கு 1000 ரூபா அபராதமும், 3 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். வரதராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அவ்வழக்கில் உரும்பராயில் 160 கிறாம் கசிப்பு வைத்திருந்ததாக வி. பெஞ்சமின் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட் பாலசுப்பிரமணியம் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். (க)


# நம்பினால் நம்புங்கள்!




வரண்ட பிரதேசமான
வட பிராந்தியத்தில்
ஏக்கருக்கு 4,900
தேங்காய்களைச்
சேகரிக்கும்
விவசாயி
குட்டி தம்பி.

சராசரி 30-40 அங்குல மழை பெய்யும் இடப்பரப்பில் சிரத்தையாக பவர்ஸ் விசேட உரத்தினைப் பாவிப்பதனால் நம்பவே முடியாத அளவு அதிக விளைச்சல் ஏற்படுகின்றது.

...கிரமமான திட்டமிட்ட பவர்ஸ் விசேட உரப் பாவனையே இது போன்ற விளைச்சலைத்தரும். 80 வருடங்களாக உர வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பவர்ஸ், விசேட தேவைகளுக்குரிய விசேட உரக் கலவையினைத் தருவதில் நிகரற்றவர்கள்.

**நீங்களும் நம்புங்கள்! - பவர்ஸ் மாத்திரமே ஒப்பற்றது என்பதனை!**

மேலதிக விபரங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் முகாமையாளர்.

ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்.
5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7651, 7156.

மெற்றிக் அந்தர் ரூபா. 2905/-

### மணிவாக்கு

நாவடக்கம் உள்ளவனுக்கு
நாவன்மை உண்டு. — அருள்விருந்து.

## நமது நோக்கு

### நீதிக்கொரு தனித்துவஉறுதி

"நாட்டின் வரலாறு இதுகாறும் காணுத கொடுமை இது. வருங் காலத்தில் இது போன்ற அழிவு என்றும் இந்நாட்டைப் பீடிக்காதிருக்கவேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகிறேம்."

ஆடிக் கலவரத்தின் கொடுமை பற்றிக் குறிப்பிட்டபோது மேற்கண்டவாறு எழுதிய நினைவு எமக்குண்டு.

சட்டத்துறையைக் கலக்கிய தனித்துவ வழக்கொன்றை ஒன்பது உயர் நீதிமன்றநீதிஅரசர்கள்விசாரணைசெய்து வெளியிட்ட தீர்ப்பில் பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் இதுபோன்ற கருத்தை குறிப்பிட்டிருப்பது கவனத்துக்குரியது.

நாட்டின் நீதியைப் பேணிப் பாதுகாக்கும் பணி உயர் நீதிமன்றத்துக்குரியது. "அதன் வரலாற்றில் இவ்வித சட்டப்பிரச்னை என்றும் எழவில்லை. சட்ட வியாக்கியானங்களின் சிக்கல்களையும் மனித விவகாரங்களின் ஏற்றத் தாழ்வையும் எடுத்துக் காட்டும் இதுபோன்ற பிரச்னை இனிமேலும் எழப்படாதென்பதே எமது விருப்பம்" என்று சுட்டிக் காட்டியிருக்கிறர் பிரதம நீதியரசர்.

'ஒன்பது நீதியரசர்கள் விசாரித்த வழக்கு பாரதூரமானதே' என்று பொது மக்கள் முடிவு கட்டுவார்கள். ஆனல் அதன் சட்ட நுணுக்கம் நீதியரசர்களுக்கே சிக்கலாகக் காணப்பட்டால் நீதியில் நம்பிக்கை கொண்டு வாழும் சாதாரண பிரஜைக்கு அது சிதம்பரசக்ரமென்பது வியப்பல்ல.

குறிப்பிட்ட சட்டப் பிரச்னை நீதியரசர்களின் உத்தியோக உறுதியைப் பற்றியதனல் பொதுமக்கள் அதன் அடிப்படைக் கொள்கையை விளங்கிக் கொள்வது அவசியம்; இயலாத காரியமுமில்லை.

பிரிவினைக்கு எதிரான ஆறுவது திருத்தச்சட்டத்துக்கமைய உயர்நீதி மன்ற நீதியரசர்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் சத்தியப்பிரமாணம் எடுக்கவில்லையென்றும், அதன்விளைவாக செப்டம்பர் 8, 9, ஆகிய திகதிகளில் இவர்கள் தம் பதவியை இழந்தனராகையால் அத்திகதிகளில் நிகழ்ந்த விசாரணைகள்அனைத்தும் செல்லுபடியாகாதென்றும் எடுத்துரைக்கப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் இவ்வாறு வாதாடியவர் பிரதிசொலிஸிட்டர் ஜெனரல்.

இதனை எதிர்த்து வாதாடிய சிரேட்ட சட்டத்தரணி, திரு. எஸ். நடேசன் (கியூ.சி.) நீதியரசர்கள் ஏற்கனவே எடுத்த சத்தியப் பிரமாணம் செல்லுபடியானதென்றும்; நீதியரசர்கள் பதவிஇழக்கச் சட்டம் எதிலும் இடமில்லையென்றும் சட்டநுணுக்கங்களை எவருக்கும் எளிதில் விளங்கும் பான்மையில் எடுத்துரைத்தார்.

நீதியரசர்கள் ஆறுவதுஅரசியலமைப்புத் திருத்தத்தின் (5) (ஏ) ஆவது திருத்தத்தின் கீழ் தாம் எடுத்துக் கொண்ட சத்தியப் பிரமாணம் சரியானதென்றும் ஜனதிபதி முன் சத்தியப்பிரமாணம்செய்ய வேண்டும் என்று அந்தச் சட்டத்தில் குறிப்பிடவில்லை என்பதே திரு. நடேசனின் வாதம்.

நீதியரசர்களின் அந்தஸ்து சட்டத்திலும், அரசியலமைப்பிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; சட்டப் பிரச்னை எழும்போதெல்லாம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பே முடிந்த முடிவுமென்பதே திரு நடேசன் நடத்திய நீண்ட வாதத்தின் தாற்பரியம்.

நாட்டின் நல்லகாலம்ஒன்பது நீதியரசர்களில் ஏழு பேர் அந்த வாதத்தை ஒப்புக் கொண்டு தாங்கள் இடைக்காலத்தில் பதவியிழந்ததாகக் கருதவில்லையென்று'ம், தொடர்ச்சியாக பதவி வகித்து வந்துள்ளனர் என்றும் தீர்ப்பளித்தனர்.

விபரீதமான ஆராய்ச்சி போல்இது தோன்றினலும், சட்டத்தின் தெளிவுகிடைக்காத பட்சத்தில் நாட்டின் உயர் நீதிமன்றத்துக்கு தலைமை தாங்கும் 'மனித தெய்வங்கள்' ஒரு பேனவின் கீற்றில் பதவி இழக்கும் நிலைமை பரிகாசத்துக்குரியதாகும்.

தேவர்களே அறியாத நீதி கடவுளின் அம்சம்.

அண்மையில் நீதியரசர்களின் தீர்ப்புக்களுக்குநேர்ந்த அநீதிகளும்அவர்கள் சிலரின் வாசஸ்தலங்களில் நடைபெற்ற குழப்பங்களும், இந்நாட்டின் நீதித் துறைக்கு எவ்வகையிலும் பெருமை அளிப்பனவல்ல.

நாட்டின் இன்றைய குழப்ப நிலையில் சட்டம் ஒழுங்கு கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பு ஆட்சிக்கு அவசியமானது.

அந்த அவசியத்துக்குப் பலமளிப்பதே நீதித் துறையின் சுதந்திரம்.

வேல் அன்று வென்றி
தருவது; மன்னவன்
கோல் அதூஉம் கோடா
தெனின்,

ஆட்சியின் படைபலம் மட்டுமல்ல, அதன் நீதியே வெற்றிதரும்; நீதி தவறிஞல் ஆட்சி குலையும்.

# கலவர நிகழ்வுகளை உலகின் கண்களிலிருந்து மறைத்துவிட முடியாது!

கடந்த ஜுலை மாதம் இலங்கையில் இடம்பெற்ற கலவரங்களின் போது நடைபெற்ற படுகொலைச் சம்பவங்கள் பற்றி மேற்கத்திய பொதுசனத் தொடர்பு சாதனங்கள் வெளியிட்ட செய்திகள் குறித்து எமது வெளிநாட்டு தூதரகங்கள் மேற்கொண்ட நடவடிக்கை கடந்த சில வாரங்களாக கடும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

எமது தூதரகங்களின் அலட்சிய - அசமந்தப்போக்கினலும் அக்கறையின்மையினலும் இலங்கை அரசுக்கு எதிராக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என குற்றம் சுமத்தப்படுகின்றன. அதே வேளையில் ஈழம் கோருபவர்களினலும் பரபரப்பை ஏற்படுத்த விரும்புபவர்களினலும் உண்மையான செய்தி முகவர்களினலும் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களின் பலத்தினல் எமது சில தூதரகங்கள் செயல்பட முடியாத நிலையில் இருந்திருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் தூதரகங்கள் என்ன செய்ய வேண்டும் என தூதரக நடவடிக்கைகளைக் கண்டித்துவருபவர்கள் எதிர்பார்க்கிறர்கள்?

கலவரம் இடம்பெற்ற காலத்தில் இலங்கையில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான உல்லாசப் பிரயாணிகள் நேரில் கண்ணுற்று கலவர நிகழ்வுகள்பற்றிக் கூறிய கூற்றுக்களும் அக்காலத்தில் தொலைக்காட்சி கமராவினுள் சிக்கிக்கொண்ட காட்சிகளும் வெளிநாடுகளில் என்றே வெளிவந்துவிட்டன. வெளிநாட்டு மக்களுக்கு எல்லாமே தெரிந்துவிட்டது. இலங்கையில்உள்ள ஒருவரோ, இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தும் எவரோ இங்கு நடந்த சம்பவங்களை மறுத்துரைப்பதில் - பிரசாரம் செய்வதில் எதுவித பலனும்இல்லை. இவ்வித பிரசாரத்தைவிட நேரில் கண்ணுற்றவையும், தொலைக்காட்சிக் கமராவினல் எடுக்கப்பட்டவையுமே தாக்கம் கூடியவையாகும்.

பயங்கரவாதச் செயல்களுக்கு எதிர்நடவடிக்கையாகவே சிங்கள மக்களுக்கு மத்தியில் வாழும் - வன்முறையில் நம்பிக்கையில்லாத அப்பாவித் தமிழ் மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர் என்றும் அவர்களது இல்லங்கள், வியாபாரநிறுவனங்கள் தீயிடப்பட்டன என்றும் நியாயப்படுத்துவதை மேற்கத்திய நாடுகளும் அந்தப் பாரம்பரியத்தில் பழக்கப்பட்ட மக்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

உலகின் முக்கிய பயங்கரவாத இயக்கங்களான பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஐரிஸ் குடியரசு இராணுவம் ஆகியவற்றின் பயங்கரவாதச் செயல்களை மேற்கு நாடுகள் கேட்டும் பார்த்தும் இருக்கின்றன.

அரபு தீவிர வாதிகளால் ஒன்றுமே அறியாத அப்பாவிகளான இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு லண்டனில் உள்ள தமது வீடுகளில் வைத்து இராணுவ வீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஐரிஸ் கடலில்வைத்து மவுண்ட்பேட்டன் பிரபு கொலை செய்யப்பட்டார். இது போன்ற சில சம்பவங்களே உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆனல் இந்தப் படுகொலைகள் காரணமாக இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள அரபு மண்ணில் வாழும் அரபு மக்களுக்கு எதிராகவோ, இங்கிலாந்தில் வாழும் ஆயிரக்கணக்கான ஐரிஸ் மக்களுக்கு எதிராகவோ பழிக்குப்பழி வாங்கப்பட்டதா?

தனி நாடு கோரும் இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள் வேறு விடயம். ஆனல் தமிழ் மக்களையும் அவர்களது உடைமைகளையும் தீயிட்டுக் கொளுத்தியதையும் அவற்றைக் கொள்ளையடித்ததையும் நியாயப்படுத்துவதும் 'அச்செயல்களை பெரும்பான்மை இனத்தினுள் ஒரு சிறுகுழுவே' இத்தகைய என்று கூறுவதும் எமக்கு எதுவிதத்திலும் பெருமை தராது.

ஜுலை மாதத்தின்பின் அந்த இருண்ட வாரத்தில் இடம் பெற்ற கலவரங்கள் தொடர்பாக அரசுக்கும், அதன் பாதுகாப்புப் படைகளுக்கும் அரசின் ஆதரவாளர்களுக்கும் எதிராகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள அதேவேளையில் அந்தக் கலவரங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை அரசாங்கமே நியமிக்க இருக்கிறது என்ற செய்தியை மேற்கத்திய பொதுசன தொடர்பு சாதனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அரசின் இதுபோன்ற பிரச்சாரங்கள் அரசுசார்பு சக்திகளின் மனச்சாட்சிக்கு ஆறுதல் அளிக்கக்கூடும் அதனல் கலவரங்களை நேரில் பார்த்த மக்களின் மனதில் உள்ள சந்தேகங்களையும் பயத்தையும் இப்பிரசாரங்கள் போக்கிவிட மாட்டாது.

கலவரங்கள் தொடர்பான அரசின் உத்தியோக பூர்வமான விபரம் எப்போது வெளி

(10-ம் பக்கம்பார்க்க)

— கலாநிதி ஈ. ஞானசேகர —
(கலைப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.)

## அகதிகள் புனர்வாழ்வுக்கு வைத்திய சங்கம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்திய சங்கத்தினர் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்திற்கு 35,103 ரூபாவை வழங்கியுள்ளனர்.

இந்நிதி அகதிகள் புனர்வாழ்வு நிதியத் தலைவர் டாக்டர் யோகு பசுபதியிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். வைத்திய சங்கத்தினர் கொழும்பிலிருந்து அகதிகள் கப்பல் மூலம் காங்கேசன் துறையை வந்தடைந்தபோது, அவர்களுக்குத் தேவையான வைத்திய உதவிகளை அளித்தனர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் அமைக்கப்பட்ட முகாமில், வைத்திய சங்க உறுப்பினர்கள் அகதிகளுக்குச் சிகிச்சையளித்தடன், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலும் கடமையாற்றினர்.

வடபகுதியில் அமைக்கப்பட்ட நிரந்தர அகதிகள் முகாம்களுக்கும் சென்று அகதிகளை பரிசோதனை செய்து சிகிச்சையளித்தனர்.

குருநகர் முகாமிற்கு தினமும் சென்று சிகிச்சையளித்ததுடன் கிளிநொச்சி முகாமிற்கு ஒன்றுவிட்ட ஒரு நாளும், தைதடிக்கு அடிக்கடியும் சென்று சிகிச்சையளித்துவருகின்றனர்.

செஞ்சிலுவைசங்கம் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்கள், தனவந்தர்கள், யாழ் வைத்திய சங்கத்தினர் அகதிகளுக்குத் தேவையான வைத்திய உதவிகளை அளித்தனர்.



கல்விமான்

## கந்தையா

இளைப்பாறிய அதிபர் திரு. ஆ. க. கந்தையா பீ ஏ அவர்களின் மறைவு இலங்கையிலுள்ள கல்விச்சேவையிலே, குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பேரிழப்பினை ஏற்படுத்தியுள்ளது. 50 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வியுலகிற்குத் தமது அளப்பரிய பணிகளைச் செய்து அமரத்துவம் அடைந்து விட்டார்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் இவர் பெற்றிருந்த தகைமைகளுடன், அரசாங்சாங்கத்திலே வேறு உயர் பதவிகளைப் பெற்று, ஒருவர் வேறு வகையிலே மேனிலையடைந்திருக்கலாம். ஆனல், கல்வி புகட்டும் புனித நெறியில் அசைவிலாத ஈடுபாடு கொண்டிருந்த இவரின் உள்ளம் பிறவற்றிலே நாட்டங்கொள்ளவில்லை. கல்வியிலே களங்கமற்ற ஈடுபாடு கொண்டு இவர் போன்று நற்பணி புரிந்த ஆசிரியப் பெருமக்களின் அரும்பெரும் பணிகளாலேதான் யாழ்ப்பாணம் இன்று கல்வித்துறையிலே மேம்பட்டு விளங்குகிறது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, இளம் வயதிலேயே இலங்கையிலுள்ள முதுபெரும் கல்லூரிகளில் ஒன்றுன யாழ்ப்பாணக் கல்லூரியிலே பயின்று, தமது திறமைகளை இவர் வெளிப்படுத்திஞர். அங்கும் சில காலம் ஆசிரியராகத் திகழ்ந்தார். அக் கல்லூரிக்குரிய பேராண்மை வாத மரபுகளிலே தோய்ந்து, தாமும் ஒரு சிறந்த கல்விமாஞகவும், சமூகத்தொண்டஞகவும் இவர் விளங்கிஞர்

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களில் உள்ள பிரபல கல்லூரிகள் சிலவற்றிலே உதவி ஆசிரியராகவும், குறிப்பாக அதிபராகவும் செவ்வனே கடமையாற்றிப் பலதலைமுறைகளைச் சேர்ந்த பல மாணவர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். இலங்கையிலே வாழ்ந்த தலைசிறந்த கல்விமான்களின் வரிசையில் இவருக்கும் ஓரிடமுண்டு.

"எழுத்தறிவித்தவன் இறைவஞவன்" என்ற தமிழ் முதுமொழிக்கேற்பப் பல மாணவர்களுக்குக் கல்வியெனும்பேரொளியினைக் காட்டிய அன்னரின் அரும் பெருந் தொண்டுகள் தொடர்ந்து நிலைக்கும். இவரின் சமயப்பற்றும், பண்பும், ஒழுக்கமும் நன்கு குறிப்பிடத்தக்கவை. இவரின் அரிய பிள்ளைகளும், மருமக்களும் இவர் செய்த அருஞ்சேவைகளை நினைவூட்டுகின்றனர். இவருடைய நற்பணிகள் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் என்பதில்ஐயமில்லை. இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

—வி. சிவசாமி

## ''பகுத்தறிவுக் கொள்கைகளால்
# தமிழ்ச் சமுதாயத்தை விழிப்புறச் செய்த ஈ.வெ.ரா.''

(மட்டுவில்)

''சமுதாய சீர்திருத்தம் தியாக உணர்ச்சியின் மூலமே உருவாக்கக் கூடியதொன்றாகும் அப்படியான தியாக உழைப்பை மேற்கொள்ள மிகச்சிலரால்தான் முடியும். இந்த அடிப்படையிலே பகுத்தறிவுக் கொள்கைகளாலும், புரட்சிகரமான கருத்துக்களாலும், தமிழ்ச் சமுதாயத்தை விழிப்புறச் செய்த பெருமை தந்தை ஈ. வே. ரா பெரியார் அவர்களையே சாரும்''.

இவ்வாறு ஈரோடு பெரியார் தந்தை ஈ. வே. ராமசாமிப் பெரியாரின் 115வது பிறந்த நாள் விழாவில் தலைமைதாங்கி உரைநிகழ்த்திய திரு. அ. பொ. செல்லையா தலைமைஉரையாற்றுகையில் கூறினார்.


தென்மராட்சி முத்தமிழ் கலை மன்றத்தார் எடுத்த இந்த விழாவில் திரு. செல்லையா தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:-

''உலக நாகரீகங்களுக்குத் தொட்டிலாகவும், அடிப்படையாகவும், தொன்மை நாகரீகத்தைக் கொண்ட தமிழர் விளங்கினாலும்கூட, அதேயளவு மடமைக்கு அடிமையாகிவிட்டவர்களாகவும் நசுங்கிக்கிடந்த தமிழினத்தை கண்திறக்கவைத்தவர் ஈ. வெ. ரா. பெரியார்.

பழமைப்பற்றுடன் கூடிய சமூகத்தில் வேரூன்றிய சாதி எண்ணமும் மக்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்ததோடு சமய மூடநம்பிக்கைகளும் வாழ்வைப்பற்றிய கவலைகளும் உயிரைப்பற்றிய ஏக்கமும் அன்றுட வாழ்வை ஓட்டினாலே போதும் என்ற நினைப்பும் நாட்டுமக்களைச் சாகாமல் சாக வைக்கும் அளவிற்கு மாற்றியிருந்தது. இந்தப்பேதை நிலையை மாற்றி அமைத்தவர் பெரியார் என்றால் மிகையாகாது'' என்றார்.

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம், திரு. கே. கே. பிள்ளை உட்படபலர் உரையாற்றினர்.

## புலமைப் பரிசில் பெற்று லண்டன் பயணம்



ஆங்கிலத் துறையில் ஆழ்ந்த அறிவு-தமிழில் ஆழ்ந்த அறிவு-கவியாக்கும் திறமை-பேச்சாற்றல்-உணர்வுடன் கூடிய சமயக் கல்வி - பிறமொழிக் கவிதைகளைச் சிதைவுறாமல் மொழி பெயர்க்கும் ஆற்றல் - நாடக ஆக்கம்-பழைய இலக்கியங்களிலும் நவீன இலக்கியங்களிலும் ஆழ்ந்த தெளிவு - தொடர்ந்து கற்றல்-அன்பு, பண்பு, பணிவு —மேற்கூறிய தகுதிகளில் ஒன்றேனும் ஒருவருடன் முழுமையாய்ப் பொருந்தியுள்ளது என்று சான்றோரால் ஒப்புக் கொள்ளக்கூடிய வகையில் இன்றொருவர் இருக்கிறாரென்றால் இன்றைய சூழ்நிலையில் அது ஓர் அதிசயம்.

அப்படியிருக்க மேற்கூறிய எல்லாத் தகைமைகளையும் கொண்டு ஒருவர், இளமையின் எல்லை தாண்டா வயதுடன் இன்று எம்முள் இருக்கிறார் என்பது தளர்வுற்றிருக்கும் தமிழர்களை தலைநிமிரச் செய்யும் ஓர் செய்தியென்பதில் ஐயமில்லை.

அவரை அறிந்தவர்கள் மேற்கூறிய அவர் திறமையை அறிவர். அறியாதவர்கள் அறிந்தவர்களை அணுகி இனி அறிந்து கொள்வர். ஏனெனில் முழுமையாய் அவர் திறமையை விவரிக்க எம் திறமை போதாது. சுருங்கச் சொன்னால் அவர் ஓர் நிறைகுடம்.

அவர் திறமையை முழுமையாய்ச் சொல்வதென்றால் பண்டிதர் கதிரிப்பிள்ளையிலிருந்து கைலாசபதி வரை பாராட்டுப் பெற்றவர்.

இவர் யார்? பெயர் சொல்ல மறந்துவிட்டேன். சோ. பத்மநாதன். ஆம்! இவர்தான் மேற்கூறிய பெருமைகளுக்குரியவர். மேற்கூறியவை சொன்ன காரணம், திரு. பத்மநாதனை லண்டன் றெடிங் பல்கலைக் கழகம் ஆங்கில மொழியில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளப் புலமைப் பரிசில் அளித்து அழைத்துள்ளது. தகுதியுள்ளவருக்குக் கிடைத்த இத்தகைமை தமிழர்களைப் பெருமைப் படுத்தும். கம்பன் கழகம் ஒரு வருடத்திற்கு ஓர் ஆழ்ந்த அறிஞனை இழக்கிறது. இவரது ஆசான் அமரர், வித்துவான் கார்த்திகேயன் மறைந்தபின்னும் பெருமையடைகிறார்.

''திறமான புலமை எனின்
வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல்
வேண்டும்''

என்ற பாரதியின் விருப்பம் நிறைவேறுகிறது.

—இ. ஜெயராஜ்
(அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)

## ''யாழ். மாவட்டத்திலுள்ள அரச தரிசு நிலங்களில் பனந்தோப்புகள் உண்டாக்குக''

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்டத்திலும், மன்னார், வவனியா மாவட்டங்களிலும் விவசாயத்துக்குப் பயன்படுத்த முடியாமல் உவர் நிலங்களாகவும் தரிசு நிலங்களாகவும் இருக்கும் அரச நிலங்களைப் பயன்படுத்திப் பனம் தோப்புக்களை உண்டாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்குப் பனை அபிவிருத்திசபை நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். தென்னை அபிவிருத்திசபை இளைஞர்களுக்குத் தென்னஞ்செய்கைக்குக் காணிகள் வழங்கி மானியம் கொடுப்பதுபோல பனை வளத்தை அளியாமல் பெருக்க இச்சபை முன்வரவேண்டும்.''

இவ்வாறு வேலணை செட்டிபுலத்தில் பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி ஆரம்ப வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய வேலணை கிழக்குக் கிராமோதயசபைத் தலைவர் ஆசிரியர் ச. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

வேலணை கிழக்கு மாதர் சங்கப் நிலையத்தில் இப்பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில், தமிழ்மக்களாகிய நாம் எமது நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சீவியம் நடத்த வேண்டிய நிலைக்கு வெகு விரைவாக வந்துகொண்டிருக்கின்றோம். எமது மூதாதையர் எமக்குத் தேடி வைத்த செல்வங்களை நாம் பேணிப் பாதுகாக்காது நாகரீக மோகத்தில் மூழ்கியிருந்ததால் இன்று கஷ்டங்களை அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது'' என்றார்.

பனை அபிவிருத்திச்சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். கோகுலதாசன், மாதர்சங்கத் தலைவி திருமதி தி. பத்மாவதி, போதனாசிரியை திருமதி ம. பாலசிங்கம், டாக்டர் இ. சற்குருநாதன், செட்டிபுலம் சனசமூக நிலையச் செயலாளர் திரு. த. செல்வரத்தினம் உட்படப் பலர் உரையாற்றினர்.

பனை அபிவிருத்திச் சபையின் புதிய உற்பத்திப் பொருட்களும் இக்கூட்டத்தில் பொது மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டன. (அ)




## தெரு விளக்குகள்

[மன்னர்]

தலைமன்னர் ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச்சென்று வரும் பிரயாணிகளின் நலன்கருதி தலைமன்னர் துறை பஸ்தரிப்பு நிலையத்தில் 7,500 ரூபா செலவில் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதற்கான நிதியை மன்னர் மாவட்ட அபிவிருத்திச்சபை தலைமன்னர் உப அலுவலகத்தினூடாக ஒதுக்கீடு செய்தது.



பிலிப்பைன்ஸ் தேசத்தில் வாழும் தமிழ் மக்கள் வன்செயலினல் பாதிக்கப்பட்ட இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு பங்கிட்டு அளிக்கும் வண்ணம் பெண்களுக்குச் சேலை வகைகள், குழந்தைகட்குத் துணிமணிகள் முதலியவற்றை அண்மையில் யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் அகதிகளுக்கு துணி பொதிகள் வழங்குவதற்கு பொறுப்பதிகாரியாயிருக்கும் திருமதி சோமகலா சண்முகலிங்கத்திடம் கையளித்தனர். இவ் வைபவத்தில் இந்திய செஞ்சிலுவைக் கூட்டுக் கழகப் பிரதிநிதி திரு. குப்தா அவர்களும், பிலிப்பைன்ஸ் தேச செஞ்சிலுவைக் கூட்டுக் கழக பிரதிநிதியும், காணமல் போனவர்களைக் கண்டுபிடிக்கும் நிபுணருமான செல்வி மசிங் அவர்களும் பங்குபற்றினர். படத்தில் திருமதி சண்முகலிங்கமும் செல்வி மசிங்கும் காணப்படுகின்றனர்.

# “வலது குறைந்தோர்களின் புனர்வாழ்வுக்கு உதவவேண்டும்”

(மாவிட்டபுரம்)

“சமூகத்தில் உள்ள வலது குறைந்தோர் மீது அனுதாபம் காட்டுவது மட்டுமல்லாமல், அவர்களின் புனர்வாழ்வுக்காக மனிதாபிமான ரீதியில் அனைவரும் செயற்பட வேண்டும். இந்த உணர்வை மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய சனசமூக நிலையங்கள் போன்ற ஸ்தாபனங்கள் மக்களிடையே வளர்க்க வேண்டும்”

இவ்வாறு குப்பிளான் வீரமனை குறிஞ்சிக்குமரன் சனசமூக நிலைய 5வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து உரையாற்றிய வலது குறைந்தோர் புனர்வாழ்வு சங்கங்களின் சம்மேளன துணைத் தலைவரும், புனிதம் வலது குறைந்தோர் புனர்வாழ்வு சங்க தலைவருமான சட்டத்தரணி க. வே. மகாதேவன் கூறினர்.

திரு ப. வசந்தகுமார் தலைமையில் நிலைய முன்றிலில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வலது குறைந்தோர் மத்தியில் பல துறைகளிலும் ஆற்றல் வாய்ந்தவர்கள் உள்ளனர். வலது குறைந்தமையால் அவர்கள் ஆற்றல் அற்றவர்கள் என யாரும் ஒதுக்கிவிடமுடியாது. இவர்களதுதிறமைகளை வளர்த்தெடுக்க சனசமூக நிலையங்கள் முன்வரவேண்டும். அவர்களை சமூகத்திற்கு உதவக்கூடியவர்களாக மாறவேண்டும்.

இன்று இளைஞர்கள் அரசியல் பொருளாதார, சமூக பிரச்னைகளால் மிகவும் விரக்தியடைந்த நிலையில் வாழ்கிறார்கள். நமது நாட்டில்மட்டுமல்ல எல்லாநாடுகளிலும் இந்நிலை நிலவுகிறது. இளைஞர்களின் சக்திமகத்தானது. அவர்களின் பங்கு இல்லாமல் எதையும் சாதித்துவிடமுடியாது. ஆனல் அவர்களது சக்தி நல்லமுறையில் பயன்படுத்தப்படவேண்டுமானல் அவர்களது உணர்ச்சிகள், செயற்பாடுகள் யாவும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவேண்டும். கட்டுக்கோப்புடன் செயல்படும் இளைஞர்களின் இலட்சியங்கள் வெற்றியடைய கால தாமதம் ஏற்படாது. இளைஞர்கள் மத்தியில் கட்டுப்பாடு, ஒழுக்கம், பண்புகள் போன்றவற்றை வளர்க்க சன சமூக நிலையங்கள் உதவவேண்டும்” என்றார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் பேசுகையில் கூறியதாவது:-

“சனசமூக நிலையங்கள் வெறும் செய்தித்தாள்களை வாசகர்களுக்கு வழங்கும் நிலையங்களாக இல்லாமல் மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்வகையில் செயல்படவேண்டும். கிராமத்

(8-ம் பக்கம் பார்க்க)

உங்கள் புதிய அல்லது புதுப்பிக்கப்பட்ட வாகனங்களுக்கு

75% கடன் வசதி

எமது நிதி நிறுவனத்தால் பல வசதிகளுண்டு.

- பாவித்த வாகனங்களுக்கு பெறுமதியில் நியாயமான கடன் வசதி.
- ஐந்து வருடங்களுக்குள் பாவனையிலுள்ள சகல பிரசித்த கார்களுக்கும் கடன் வசதி.
- கைத்தொழில், கமத்தொழில் உபகரணங்களை வாங்குவதற்கு கடன் வசதி
- புதிய யப்பானிய வாகனங்களை கொள்முதல் செய்யவும், இறக்குமதி செய்யவும் வசதி செய்கிறோம்.
- வீட்டுப்பாவனைப் பொருட்களை கொள்முதல் செய்து மாதாமாதம் பணம் செலுத்தும் கடன் வசதி.
- சகல நடவடிக்கைகளுக்கு முத்திரைச் செலவு அறவிடப்படுவதில்லை.
- பினன்ஸ் வசதிகளை பெறுபவரை அறிமுகப்படுத்துவோருக்கு கமிஷன் வழங்கப்படும்.

சென்றல் பினன்ஸ் கம்பெனி லிமிட்.,

250, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 24360



# யாழ். வைத்திய பீடத்தில் உருவான புதிய டாக்டர்கள்

## யாழ். பல்கலைக்கழக சரித்திரத்தில் முதல் தொகுதி

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட இறுதிப் பரீட்சையில் 39 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் முதலாம் வகுப்பில் எவரும் சித்தியடையவில்லை. 2-ம் வகுப்பில் 22 பேர் சித்தியடைந்துள்ளனர். 17 பேர் சாதாரணசித்தியடைந்துள்ளனர். 12பேர்நூன சித்தியடைந்துள்ளனர்.

1978-ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முதன்முதலாக மாணவர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு:

**1-ம் வகுப்பு**

இல்லை

**2-ம்வகுப்பு**

01. செல்வி எஸ். அழகரத்தினம், 02 செல்வி பி. சி பி அல்பிறட், 03. எம். அன்பழகன். 04. செல்வி எஸ். அரசசிங்கம், 07. எம். பிரபாகரன், 08. பி, எல் சந்திரகாசன், 09. கே. சந்திரசேகர், 10. கே. கணேசரட்ணம், 12. எஸ். ஜெயரட்ணம், 14. பி. லிங்கதாஸ், 15. பி. எம் மஃபூப்,

(9-ம் பக்கம் பார்க்க)

# "தொண்டா - உமா பேச்சுவார்த்தை: அமைச்சர் நாடு திரும்பியதும் விபரங்களை அறியமுடியும்"

## பாராளுமன்றத்தில் ரணில்

(கொழும்பு)

''தமிழ்ஈழ விடுதலைக் கழகத் தலைவர் திரு. உமா மகேஸ்வரனுடன் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு எஸ். தொண்டமான் சென்னையில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபாங்களை அவர் நாடு திரும்பியவுடன் அறியமுடியும்.''

இவ்வாறு கல்வியமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்கா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அவசரகாலத்தைநீடிக்கும் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்: ''ஜனதிபதியால் கூட்டப்பட்ட வட்டமேசை மகாநாட்டில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஏன் கலந்துகொள்ளவில்லையென்றும்'' வினவினர்

மனித உரிமை மீறல் மனு:

# செப். 8, 9-ம் திகதி விசாரணைகள் செல்லுபடியாகும்

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

பிரிவினைக்கெதிரான ஆறுவது அரசியலமைப்புக்கு அமைவாக மேன்முறையீட்டு, உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எடுத்த சத்தியப்பிரமாணம் செல்லுபடியானது. அவர்கள் இடைக் காலத்தில் பதவியிழந்ததாகக் கருதமுடியாது. இந்த நீதியரசர்கள் தொடர்ச்சியாகப்பதவி வகித்துள்ளார்கள்.

இவ்வாறு உயர்நீதிமன்றம் 7-2 பெரும்பான்மையால் தீர்ப்பளித்தது.

இதன் பிரகாரம் கடந்தசெப்டம்பர் மாதம் 8ம், 9ம் திகதிகளில் நடைபெற்ற உயர்நீதிமன்ற விசாரணைகள் அனைத்தும் செல்லுபடியாகுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அரசுதரப்பின் பூர்வாங்க ஆட்சேபனைகள் இரண்டையும் நிராகரித்த நீதியரசர்கள் மனிதஉரிமைகள் மீறல் மனு மீதான விசாரணையை நடத்த உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதாகவும் நீதியரசர்கள் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரகோன், நீதியரசர்கள். திரு. எஸ். சர்வானந்தா, திரு. ஆர். எஸ். வனசுந்தரா, திரு. டி. விமலரத்ன, திரு. ஜே. எப். குசா, ஜனப் எம். எம். அப்துல் காதர், திரு. பி. எஸ். ஏ. ரத்வத்த, ஆகியோர் ஆதரவாகவும், நீதியரசர்கள் திரு. பாரிந்த ரணசிங்கா, திரு. எச். ரெட்றிக்கோ ஆகிய இருவரும் எதிராகவும் தீர்ப்பு வழங்கினர். எதிராகத் தீர்ப்பளித்த நீதியரசர்கள் இருவரும் 'சற்றர்டே றிவியூ' பத்திரிகை தொடர்பான மனித உரிமை மீறல் மனு மீதான விசாரணையின் கால எல்லை கடந்துவிட்டதால் அதை நிராகரிப்பதாகத் தெரிவித்தார்கள்

ஆதரவாகத் தீர்ப்பு வழங்கிய நீதியரசர்கள், உயர், மேன்முறையீட்டு நீதியரசர்கள் இடையில் பதவி இழக்கவில்லையென்றும், கடந்த செப்டம்பர் மாதம் 15-ம் திகதி ஜனதிபதியின் முன்னிலையில் எடுத்த சத்தியப்பிரமாணம் தொடர்மாக தாங்கள் கவனம் செலுத்தவில்லை என்று தெரிவித்தனர்.

மேன்முறையீட்டு நீதியரசர்கள் செப்டம்பர் 4-ம் திகதியும், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆகஸ்ட் 31-ம் திகதியும் சக நீதியரசர்கள் முன் சத்தியப்பிரமாணம் எடுத்தார்கள். இச் சத்தியப் பிரமாணம் செல்லுபடியாகும். எனவே அவர்கள் பதவி இழக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இதனுல் மனுதாரர் தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ. ஸி.யின் சட்ட வாதத்தை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் பெரும்பான்மை நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர். (வெ)

# அகதிகளுக்கு புதிய மண்டபம் அன்பளிப்பு

## காங்கேசன் தொழிற்சாலை ஊழியர் உதவி

(பண்டத்தரிப்பு)

மாதகல் அகதிகள் முகாமில் தங்கியுள்ள மக்கள் வசதியாக குடியிருப்பதற்காக தனித்தனி அறைகளைக் கொண்ட பாரிய மண்டபம் ஒன்றை காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களும் அதிகாரிகளும் ஒன்றிணைந்து அமைத்துக்கொடுத்துள்ளனர்.

குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியவற்றையும் இவர்கள் வழங்கிவருகின்றனர்.

## நியமனம்

(மன்னர்)

உள்நாட்டு அமைச்சில் கடமையாற்றிய திரு. கே. தர்மரத்தினம் மன்னர் கச்சேரி தலைமையக உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்

யாழ். செஞ்சிலுவைச் சங்கம்

# 13,157 குடும்பங்களுக்கு உடுபிடவைகள் வழங்கியது

(மாவிட்டபுரம்)

வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு இங்கு வந்துள்ளவர்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்டுவரும்உடுபுடைவைகள் இதுவரை 13,157 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் இந்தியா, சீன, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், ஜெனிவா ஆகிய நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்களிடமிருந்து உடுபுடைவைகள், பால் மா, மருந்துவகைகள் பெற்று இங்குள்ள அகதிகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 18 அகதிகள் முகாம்களுக்கும் 2,423 உடுபுடைவைகள், பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும்வரும் அகதிகளுக்குஇவைவழங்கப்படவிருக்கிறது. இந்த அகதி முகாம்களுக்குத் தேவையான மருந்துவகைகள், பால்மா ஆகியவற்றையும் விநியோகித்து வருகிறது. அங்குள்ள அகதிகளுக்கு முதலுதவி வழங்குவதுடன் யாழ். மருத்துவர்சங்கத் தலைவர் டாக்டர் கிருஷ்ணராசா தலைமையில் வைத்திய சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள16 உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உடுபுடைவகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். பிரிவு: 1088, சாவகச்சேரி: 997, நல்லூார்: 1337, உடுவில்: 258 சங்கானை: 1037, சண்டிலிப்பாய்: 581, தெல்லிப்பளை: 600, நெடுந்தீவு: 86, கோப்பாய்: 999, பளை: 124, வேலணை: 780, கரவெட்டி: 966. பருத்தித்துறை: 600, ஊர்காவற்றுறை: 881, கிளிநொச்சி: 1000, பூநகரி: 100,

செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக், மற்றும் திருவாளர்கள் ஆனந்தராசா, ரி. வாமதேவன், பாலதேவன், திருமதி சண்முகலிங்கம் ஆகியோர் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்விநியோக ஏற்பாடுகளை திருமதி அநித்தா தேவநேசன் நேசையா கவனித்து வருகிறார். (வெ)

— டீசல் கேட்டுவந்த இளைஞர்கள் —

# வானை விட்டுவிட்டு சைக்கிளில் தப்பி ஓடினர்

(பண்டத்தரிப்பு)

ப. நோ. கூ. சங்கம் ஒன்றுக்கு அதிகாலையில் வான் ஒன்றில் வந்த சில இளைஞர் அங்கிருந்த காவலாளியிடம் டீசல் கேட்டனராம். டீசல் இல்லை என்று கூறவே வானை விட்டுவிட்டு அங்கிருந்த இரு சைக்கிள்களையும் எடுத்துக் கொண்டு சென்று விட்டனராம்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:

கடந்த வியாளனன்று அதிகாலை அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வான் ஒன்றில் வந்த இளைஞர்கள் சிலர் தமக்கு டீசல் தருமாறு அங்கு கடமையிலிருந்த காவலாளியை கேட்டனராம். அங்கு டீசல் இருப்பது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று காவலாளி கூறவே வானை அங்கு நிறுத்திவிட்டு அவரது சைக்கிளையும், அங்கு நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு சைக்கிளையும் வானில் வந்தவர்கள் எடுத்துச் சென்றனராம்.

இதுபற்றித்து சுன்னகம் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளது,

## இளவரசர் சிஹானுக் அரசிற்கு ஐ. நா பொதுச்சபை அங்கீகாரம்

நியூயோர்க் அக்: 21

இளவரசர் சிஹானுக்கின் ஜனநாயக கம்பூச்சியா அரசாங்கத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அங்கீகரித்துள்ளது.





முற்றிலும் புதிய மஸி பேர்குஸன் 240 சுப்பர்



விவசாய இயந்திர உபகரணங்களின் இறக்குமதி, விநியோகம், பராமரிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பிறவுண்ஸ் கம்பனியார் இப்பொழுது விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கும் அதிநவீன உழவு இயந்திரம்.

சிறப்பம்சங்கள்:

★ எரிபொருள் பாவனையில் சிக்கனம்
★ குறைந்த செலவில் நிறைந்த சக்தி
★ நீண்டகாலப் பாவனை
★ இயக்குவதற்கு இலகுவானது

இலங்கையில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழில் அனுபவம் கொண்ட பிறவுண்ஸ் கம்பனி அதி உன்னதமான விற்பனைக்குப் பிந்திய பராமரிப்புச் சேவையையும் வழங்குகின்றது.

பிறவுன் அன்ட் கொம்பனி லிமிட்டெட்

விவசாயப் பிரிவு
75, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 93097/595238
கிளைகள்: யாழ்ப்பாணம், பரந்தன், வவுனியா, குருநாகல், அம்பாறை. நாடெங்கிலுமுள்ள அதிகாரம்பெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

Grant K & E 4843

# கடத்தப்பட்ட சைக்கிளுடன் இருவர் கைது!

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிமுனையில் மோட்டார் சைக்கிள் கடத்தியதாக சந்தேகத்தின்பேரில் இருவரை சுன்னுகம் பொலிசார் கைது செய்ததுடன், மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 7-20மணியளவில் சுன்னுகம் சூராவத்தையில் வைத்து வேலணையைச்சேர்ந்த கே. இ. ஜெகசோதி என்பவரின் மோட்டார் சைக்கிளை 3 இனம்தெரியாத வாலிபர்கள் கடத்தியதாக சுன்னுகம் பொலிசில் புகார் செய்யப்பட்டது.

இக்கடத்தல் சம்பந்தமாக விசாரணை நடாத்தியசுன்னுகப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் சுன்னுகத்தைச்சேர்ந்த ஆறுமுகம் என்பவரையும் அரியரத்தினம் சிறீதரன் என்பவரையும் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியடதுன் மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனராம் இக்கடத்தல் சம்பந்தமாக மேலும் ஒருவரைப் பொலிசார் தேடி வருகின்றனர். (மா)

## வலது..,

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் வளர்ச்சி அக்கிராமத்தில் இயங்கும் சனசமூக நிலையத்திலும் பெரிதும் தங்கியுள்ளது தொண்டாற்றும் மனப்பான்மையுள்ள சேவையாளர்கள் சனசமூக நிலையங்களில் அங்கம் வகித்து கிராமவளர்ச்சிக்கு உதவவேண்டும்'' என்ருர்.

சட்டத்தரணி க.வைரவநாதன் இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து இச் சனசமூக நிலையத்திஞல் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கு பரிசில்களை வழங்கினுர்.

கவியரங்கமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# பழமரக்கன்றுகள், விதைகள் யாழ். நகரில் பெறலாம்!

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் விவசாயிகளுக்கும், வீட்டுத்தோட்டம் செய்வோருக்கும் வசதியாக மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையமும், அரசினர் பண்ணையும் பழமரக் கன்றுகளையும், விதைகளையும் யாழ் நகரின் சில இடங்களில் இன்று முதல் இம்மாதம் 28ம் திகதிவரை சகாயவிலையில் விற்பனைசெய்யவுள்ளன.

மா, பலா, கொய்யா, நெல்லி அகத்தி, மரக்கன்றுகளும், கத்தரி, வெண்டி, பாகல், புடோல், பூசனி விதைகளும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இன்று காலை 9 மணிமுதல் காலை 11 மணிவரை யாழ். பஸ்நிலையத்திலும், 25-ம்திகதி யாழ்ப்பாணம் கச்சேரியில் காலை 9 மணி முதல் காலை 11 மணிவரையும், 28-ம் திகதி நல்லூர் கந்தசாமிகோவிலுக்கு அருகாமையில் காலை 9மணி முதல் காலை 11 மணி வரையும் விற்பனையாகும் (க)

## தந்திக்கம்பிகள் திருட்டு அதிகரிப்பு

(வேலணை)

புங்குடுதீவில் தந்திக் கம்பி திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன.

திருடப்பட்டுவரும் தந்திக் கம்பியை இரவில் தெருவில் இருக்கும் மின்சார கம்பியில் இணைத்து களவான முறையில் மின்சாரத்தையும் பெற்றுவருகின்றனராம். இதன் காரணமாக புங்குடுதீவுப் பகுதியில் இருந்து வெளியிடங்களுடன் தொலைபேசி சேவைகளை தொடர முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.


தந்திக் கம்பிகளின் களவுகள் அதிகரித்துக் கொண்டு இருக்குமாஞல் புங்குடுதீவு-யாழ்ப்பாணம் தந்திச் சேவைகள் வெகுவாக பாதிக்கப்பட இடமுண்டு என தந்திச்சேவை பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (க)

## ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்க பரீட்சை

(கல்வியங்காடு)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தமிழ்மொழியையும், தமிழ் பண்பாட்டையும் வளர்க்கும் பணியில் க, பொ. த. சாதாரண வகுப்பு மாணவர்களுக்காக தமிழ் மொழிப் பாடத் திட்டத்திற்கமைந்த தமிழ் மொழிப் பரீட்சையை வருடா வருடம் நடாத்தி வருகிறது. இச்சங்கத்தின் தலைவரும், யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளருமான திரு ம. சிமியாம்பிள்ளையும், இச்சங்கத்தின் செயலாளரும் யாழ்ப்பாண பிரதம கல்வி அதிகாரியுமான திரு பெ. சபாநாயகமும் இப்பரீட்சை நடத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். யாழ்மாவட்ட பாடசாலைகளுடன் மன்னுர், முல்லைத்தீவு, வவுனியா, அனுராதபுரம், கொழும்பு, கண்டி மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிறகல்வி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்குரிய இப்பரீட்சை நவம்பர் மாதம் 25-ம் திகதி நடைபெறும். இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இம்மாதம் 28-ம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பம்செய்யவேண்டும்.

இப்பரீட்சையை நடாத்துவதன் நோக்கம் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழியில் ஊக்கமும், பயிற்சியும் பெற வாய்ப்பேற்படுத்தச் செய்வதேயாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. [ப]



## பேரிழப்பு

அமரர் நாகலிங்கம் சிவலிங்கம் கணிய அளவையாளர் (குவான்றற்றிசேவையர்)அவர்களின் அகால மறைவு குறிப்பாக கோப்பாய் கந்தர்மட பொதுமக்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

அமரரின் 93வதுநாள் சிரார்த்தினம் நேற்று அன்னுருடைய இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. வாழவேண்டிய வயதில் தனது இளம் மனைவியையும் பிஞ்சு உள்ளம் கொண்ட பிள்ளைகளையும்தவிக்கவிட்டு பொல்லாதகாலன் அபகரித்துச் சென்று விட்டான்.

அமரர் தனது தொழில் நுட்பத் திறமையிஞல் துபாய் நாட்டு நிறுவனமொன்றில் சுமார் 5வருடங்களுக்கு மேலாகச் சிறந்த சேவையாற்றி உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றவர். தனது அன்பு மனைவியையும் அருமைக் குழந்தைகளையும் பார்ப்பதற்காக இரண்டு மாதங்கள் லீவில் இவ்விடம் வந்து நிற்கும் போதே அகாலமரணமாஞர்.

அமரர் தமிழ்ச் சமுதாயத்திற்கு தன்னுல் இயன்றவரை சேவையாற்ற வேண்டும் என்றும் துடியாய் துடித்தவர். அண்மையில் கந்தர் மடத்தில் இடம் பெற்ற கலவரத்தின் போது வீடுகளை இழந்த மக்களுக்கு பொருளுதவி செய்த வள்ளல்களில் இவரும் ஒருவர்.

அமரரின் இழப்பு அன்னுரின் குடும்பத்தினருக்கு மட்டுமன்றி தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

— அன்பு

## சிறுபான்மை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பிற்கும் அரசு உத்தரவாதமளிக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அண்மையில் இடம்பெற்ற வகுப்புக்கலவரங்களின்போது உயிரிழந்தவர்களுக்கும் இக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது


யாழ். மக்களுக்கோர்

மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவுசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ்

(பிறைவேற்) லிமிட்டெட்

1. கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும், மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நோர்வேயில் (NORWAY) 1984-ம் ஆண்டிற்கான பாடசாலை அனுமதி பெறுவதற்கும் அது தொடர்பான சகல ஏற்பாடுகளுக்கும் உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.
Stage II Model Market,
No. 5, 1st Foor,
BUS STAND CENTRE ROAD
JAFFNA

மிக குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?

நகல் படிவங்களை;

1. அதே அளவில் (Same Size)
அல்லது
2. பெரிய அளவில் (Enlarged Size)
அல்லது
3. சிறிய அளவில் (Smaller Size)

Minolta Machine இல் பெற்றுக் கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள் பெரிய, சிறிய பிரதிகளுக்கு கட்டணத்தில் வேறுபாடு இல்லை.

ஏன்?

Minolta Photo Copier மெஷின்களையே பெற்றுக்கொள்ளவேண்டுமா?

விலை விபரம்:-

1. Minolta PPC Photo Copier Model EP 300 78,590-00
2. Minolta PPC Photo Copier Model 300 RE 88,600-00

விசேட சலுகையாக ரொக்க விற்பனைக்கு 10% வீதக் கழிவு வழங்கப்படும்.

குரேஸ் ரெக்னிக்கல் சேவிஸ் (குரேஸ் ட்ரவல் ஸ்தாபனத்திற்கு அருகாமையில்)
படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

உயிரோட்டமான படங்களை எடுப்பதில் உலகப்புகழ் வாய்ந்த Minolta கமராக்களை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் பெறக்கூடிய இடம்

குரேஸ் ரெக்னிக்கல் சேவிஸ்





உங்கள் மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக் கொள்ள உத்தரவாதத்துடன் ரீ.வி ஏரியல் அமைத்துக் கொள்ளவும்

வீனஸ்
226/1, ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

நியூ வீனஸ்
79/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
• சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**ராஜா** [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]

100வது நாளைத் தாண்டி
**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
**சகலகலா வல்லவன்**

இன்னும் சிலதினங்க ளுக்கு மட்டும் அதனால் இன்றே பாருங்கள்
**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
Next:
FROM HERE TO ETERNITY

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5-00, 7-15
"RAID ON ENTEBBE" in
**Operation Thunderbolt**
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.
Passess Concessions suspended.

**வின்ஸர்** (யாழ் நகர்)
22 - 10 - 83 முதல்
தினசரி 10-30, 2-30 6-15
எஸ்.எஸ்.ஆர்- விஜயகுமாரி
**நானும் ஒரு பெண்**
(புதிய பிரதி)
25 - 10 - 83 முதல்
சரத்பாபு - சுமனலதா
**திசை மாறிய பறவைகள்**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6.30
கமலஹாசன் - ஸ்ரீதேவி **குரு**
From 25th
36th CHAMBER OF SHAOLIN


## புதிய காப்புறுதித் திட்டம் அறிமுகம்
# வசதியான நேரத்தில் கட்டணம் செலுத்த முடியும்

(கொழும்பு)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வேறுபட்ட வருமானமுடையவர்களின் நன்மை கருதி புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகஞ் செய்திருக்கிறது. குறிப்பாக கிராமவாசிகளும் நகர்ப்புறங்களில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வாழ்க்கைக்கும் குடும்பத்தினரின் வருங்காலத்திற்கும் ஆதாரமாக ஆயுட் காப்புறுதி செய்து கொள்ள இந்தத் திட்டம் வசதியளிக்கிறது.

குறிப்பிட்ட தினங்களில் காப்புறுதிக் கட்டணத்தைக் கிரமமாகச் செலுத்தக்கூடியவர்களே இதுகாலவரை ஆயுட் காப்புறுதி செய்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இப்பொழுது அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பொதுசன காப்புறுதித்திட்டம் இந்த நாட்டின் காப்புறுதித்துறை வரலாற்றில் தனித்துவமானது. காப்புறுதித்துறையானது உலகெங்கிலும் கண்டிப்பான சட்டதிட்டங்களைக் கொண்ட ஒன்ருக விளங்குவதால் எமது புதிய கொள்கை விசேட முக்கியத்வம் பெறுகின்றது.

பொதுசனக் காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்து கொள்ளும் ஒருவர் குறிப்பிட்ட திகதிகளில் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்படமாட்டார். வசதியான வேளையில் அதனைச் செலுத்திக் கொள்ளலாம். முதலாவது ஆண்டுக்குரிய கட்டணத்தை ஒரே தடவையில் அல்லது இரண்டு தவணைகளில் செலுத்தியதும் ஆயுட் காப்புறுதி நடைமுறைக்கு வந்துவிடும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் கட்டணம் செலுத்தப்படாவிட்டாலும் இந்தக் காப்புறுதிப்பத்திரம் நடைமுறையில் இருக்கும். இந்தக் காலப்பகுதியில் காப்புறுதி செய்யப்பட்ட முழுத்தொகையையும் வழங்கக் கூட்டுத்தாபனம் கடமைப்பட்டுள்ளது. குறைந்த முதவீடு (கட்டணத்தில்) இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

பத்திரம் முதிர்ச்சியுற்றதும் காலத்திற்குக்காலம் வழங்கப்படும் தாராள லாபப் பங்குப் பணம் மொத்தத் தொகையுடன் சேர்த்துக் கொள்ளப்படும். கூட்டுத்தாபனம் பலமும் உறுதியுமுள்ளதாக விளங்குவதால் பல்வேறு தரப்பு மக்களின் வசதிக்கேற்றவிதத்தில் ஆயுட் காப்புறுதித் திட்டங்களைப் பன்முகப்படுத்தக் கூடிய நிலையில் உள்ளது. குறைந்த கட்டணத்தையும் விசேட சலுகைகளையும் கொண்ட மற்றுமொரு காப்புறுதித் திட்டத்தையும் நாம் அறிமுகஞ் செய்துள்ளோம். சாதாரண வருமானம் பெறுவோருக்கென கொண்டுவரப்பட்டிருக்கும் மும்மடங்கு இலாபத்துடனான காப்புறுதித் திட்டமே இதுவாகும். இந்தத் திட்டத்தின்படி ஒருவர் இயற்கை மரணமெய்தினல் (நோய்வாய்ப்பட்டு) காப்புறுதி செய்யப்பட்ட தெரிகையில் இருமடங்கு வழங்கப்படும். அவர் விபத்தில் உயிரிழந்தால் மும்மடங்குத் தொகை வழங்கப்படும் சகல கொடுப்பனவுகளுடனும் லாபப்பங்குப் பணமும் சேர்த்துக் கொள்ளப்படும்.

காப்புறுதித் திட்டங்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி ஒவ்வொரு தனிநபரதும் குடும்பத்தினதும் வாழ்க்கையில் பாதுகாப்பு ஆதாரத்தை அளிக்கும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோளுக்கு அமையவே இந்தக் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல: 84 அ— பிரிவுகள் 524, 532)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற கந்தப்பர் வல்லிபுரம் என்பவரின் மரணசாதனத்தின்/ மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

வல்லிபுரம் வேலாயுதம் தும்பளை பருத்தித்துறை

எதிர் மனுதார்.

வல்லிபுரம் தங்கவடிவேல் தும்பளை பருத்தித்துறை.

மரண சாதன நியாயாதிக்க } இல. 1177/T

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின்முன்னர்தோன்றிஅவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி.
12-10-83

காரணம் காட்டும் திகதி 24-11-83க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
றிச்சேட் ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

ஆக்கம்
இ. சதானந்தன்
சட்டத்தரணி புலோலி.

9388



**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00
சிவாஜி — ஸ்ரீதேவி
**பட்டாக்கத்தி பைரவன்**
Soon
"IT COULD HAPPEN TO YOU"
Film on V. D.

**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.30, 6.30,
சந்திரசேகர், சுகாசினி, ராஜீவ்
**"பாலைவனச் சோலை"**
வண்ணப்படம் - புதியபிரதி


## இடம் பெயர்ந்த அரச ஊழியர் விபரம்

(யாழ்ப்பாணம்)

கலவரத்தினுல் இடம் பெயர்ந்த அரச ஊழியர்களின் விபரங்களை யாழ் கச்சேரியிலுள்ள மாவட்ட திட்டமிடல் பணியகம் சேகரித்து வருகிறது. விபரம் தெரிவிப்பதற்கான கடைசித் தினம் இம்மாதம் 17-ம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் சில தினங்களுக்கு இவ்விபரங்களை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

## யாழ். வைத்திய

(5ம் பக்கத் தொடர்ச்சி)

19. செல்வி. கே. மகேந்திரராசா, 18. வி. மனோகரன், 23. எஸ். நடராசா, 26. டபிள்யு. பரமானந்தன் விசேட சித்தி மருத்துவம்), 29. கே. பியகுமார் (விசேட சித்தி மருத்துவம்), 39. எஸ். செல்வரத்தினம், 40. எஸ். செல்வகுமார், 41. செல்வி கே. சாந்தி, 42. ஆர். சிவன் விஜயசேகரன், 43. செல்வி என். சோமசுந்தரம், 44. ரி. சொர்ணராசா.

**சித்தி**

05. செல்வி. எம். அருளானந்தம், 06. எஸ். ஓம்பகவான், 11. பி. கணேசன், 19. ஏ. எல். மொகமட் நசீர், 21. எம். ஜே. எம். முபாரக், 30. எஸ். பிறேமச்சந்திரன், 31. செல்வி. ரி. புவனேஸ்வரிஅம்ம, 33. செல்வி. இ. எஸ். ஆர். ராஜநாயகம், 34. செல்வி. எஸ். ரேணுகாதேவி, 36. வி. சந்திரகுமார், 37. செல்வி. ஆர். சசிகலா, 38. செல்வி. ரி. செல்லையா, 46. வி. சுந்தரேசன், 47. செல்வி. என். தம்பாபிள்ளை, 49. செல்வி. ஜி. உஷாதேவி, 50. ஆர். கே. வேலழகன், 51. வி. விக்னேஸ்வரன்.

**நுான சித்தி**

13. கே. கேதீஸ்வரன், 17. செல்வி. எம். மாலதி, 20. எம். ஆர். மொகட்சியாட், 22. எம். எம். முஸாலீர், 24. எஸ். நஜமுடீன், 25. என். நவநீதம், 27. செல்வி. எஸ். பத்மலோசினி, 28. செல்வி. எஸ். பத்மராணி, 32. செல்வி. கே. இராசையா, 35. செல்வி. பி. சகுந்தலாதேவி, 45. செல்வி. ஜி. எம். சுப்பிரமணியம், 48. ரி. தவகோடிராஜா. (க)


"சரிவரத் தன் வேலைகளைச் செய்து உண்பவரே திருப்தியுடன் உண்கிருர்கள். அவர்கள் யாராலும் விரும்பத்தக்கவராவர்" — மகாத்மாகாந்தி




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு கொடுப்பது உங்கள் கடமை.

வாங்கிப் பாவியுங்கள் சுப்பமில்க்வைற் சோப் பளிச்சிடும் வெண்மையைத் தருவது, தரத்தில் சிறந்தது பாவனையாளர்களுக்கு லாபகரமானது

**சுப்பமில்க்வைற் சோப்**

விலை ரூபா 6/-

10 மேலுறைகளுக்கு ஒரு அப்பியாசக்கொப்பி அல்லது பொலித்தீன் பாக் இனும்.




"உஷா" எனச் செல்லமாக எம் எல்லோராலும் அழைக்கப்படும் "லயன்" துரைச்சாமியுடன் எனக்குக் கடந்த சில ஆண்டுகளே பரிச்சயம் ஏற்பட்டாலும் பல்லாண்டு காலம் நெருங்கிப் பழகிய பாசமிகு நண்பன் ஒருவனை இழந்து விட்ட மனோநிலையே எனக்கு ஏற்பட்டுள்ளது. சாவகச்சேரி 'லயன்ஸ்' கழகத் தலைவராக நான் கடந்த ஆண்டு கடமையாற்றியபோது கழகச் செயலாளராக லயன் துரைச்சாமி விளங்கினுர். அதனு அவருடன் மிகவும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

பண்பால் உயர்ந்தவராக பழகும் முறையால் எவரையும் கவர்ந்தவராக துடிப்பு மிக்க ஒருவராக அவர் விளங்கினுர். வலுவிழந்தோர் இல்லமொன்றை அமைக்கும் விழுமிய நோக்குடன். சென்ற ஆண்டு எமது கழகம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஒரு களியாட்ட விழாவை நடத்தியபோது சகல பொறுப்புக்களையும் அவர் தலைமேல் ஏற்று எனக்கு ஒரு வலது கரம் போல உறுதுணையாக நின்று ஆற்றிய சேவை அளப்பரியது.

இரத்த அழுத்த நோயினுல் அவர் சிறிது பாதிக்கப்பட்டிருந்தமையால் அதிகம் அலைச்சல் படவேண்டாமென்று நான் சொல்லும் பொழுதெல்லாம், "அம்பி, பயப்படாதே நான் தொண்ணூறு வயதுவரை வாழ்ந்திடுவேன்" என்று வாயாரக் கூறுவார்.

தொண்ணூறு வயது வரை வாழவேண்டும் என்று விரும்பிய அந்தத் துடிப்புமிக்க சீவன் ஐம்பத்திரெண்டு வயதிலேயே அமலன் அடியை அடைந்துவிட்டார். இறைவனும் தமக்கு இனியவர்களை இவ்வுலகில் அதிக காலம் விட்டுவைப்பதில் லைப்போலும்.

உயர்ந்த இலட்சியம், எவர்க்கும் உதவும் தாராள மனம், தயாளசிந்தை இளகிய நெஞ்சம் இறைபக்தி ஏழைக்குதவும் மாண்பு இவற்றினுல் தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைத்தார். அவை, அஞ்சாமை, அறம் செய்யும் நோக்கு, சமரச மனப்போக்கு, எதையும் தயக்கமின்றி எவர்க்கும் தான் நினைத்ததை வெளிப்படையாகக் கூறவிரும்பும் வெள்ளையுள்ளம், இவற்றையெல்லாம் அணிகலனுகக் கொண்ட இவர் சிறந்த சமூக சேவகராக விளங்கினுர்.

இவரின் மறைவு எமது கழகத்திற்கு ஒரு மாபெரும் இழப்பாகும். தற்பொழுது கழகத்தின் உபதலைவர்களில் ஒருவராக விளங்கிய இவர் கழகத்தின் ஒரு பலம் மிக்க தூண் போன்று விளங்கினுர்.

அன்னுரின் திடீர் மறைவினுல் மாருத்துயரில் மூழ்கியிருக்கும் அன்னுரின் மனைவி, மக்கள் உற்ருர், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர் ஆத்மா இனிப்பிறவாப் பெரும் பேற்றை அடைந்து இறைவன் திருவடிநிழலில் நித்திய சாந்தி எய்தப்பிரார்த்திக்கின்ருேம்.

லயன் செ. அம்பிகைபாலன்

மட்டுநகர் சிறையிலிருந்து தப்பி

# உடுப்பிட்டியில் கைதானவர் பல கொள்ளையுடன் தொடர்பு!

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு சிறையில் இருந்து தப்பி ஓடி உடுப்பிட்டியில் மீண்டும் கைதுசெய்யப்பட்ட இளைஞரினால் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கருதப்படும் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளையும் மற்றும் சில பொருட்களையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி அல்லது சிவம் என்ற நபர் மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பிஓடிய பின் உடுப்பிட்டியில் வைத்து சிறுமி ஒருவரிடம் காதணியை பறித்தபோது பொதுமக்களினால் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந் நபரை விசாரணைக்குட்படுத்திய வல்வெட்டித்துறைப் பொலிசாரே மேற்படிபொருட்களை மீட்டுள்ளனர்.

இந்த நபரினால் கொள்ளையடித்துவிற்கப்பட்டதாகக் கருதப்படும் தாலிக்கொடி உட்பட 25 பவுண் நகைகளைப் பொலிசார் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இடங்களில் உள்ள நகைக்கடைகளிலிருந்து கைப்பற்றினர்.

ஒரு சைக்கிள், மின்சார உபகரணங்கள், வானொலிப் பெட்டி ஆகியவற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இந் நபர் 10 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகச் சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிசார் தெரிவித்தனர். உடுப்பிட்டியைச் சேர்ந்த இந்நபர் பருத்தித்துறையில் இடம்பெற்ற 2 கொள்ளைகளிலும் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற 8 கொள்ளைகளிலும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்நபர் தம்முடன் சிறையிலிருந்து வெளியேறிய சின்னத்துரை சிவலிங்கம், ஆறுமுகம் சிவனேசன் ஆகிய இருவருடனும் இணைந்து தம்பிலுவில் இலங்கை வங்கிக் கிளையில் காவலாளிகளிடமிருந்து 2 துப்பாக்கிகளைக் கொள்ளையடித்ததாகவும் பின்னர் பன்குளத்தில் உள்ள வீடொன்றுக்குத் தீ வைத்ததுடன் அங்கு இடம்பெற்ற ஒரு பெண்ணைப் பலிகொண்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. அன்ரன் சந்திரசேகரா தலைமையில் கான்ஸ்டபிள்கள் அற்புதநாயகம், பாலசுந்தரம், சந்திரசிறி, சமரவீர ஆகியோர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# குப்பைக்குள் சிசு

(மட்டுவில்)

பிறந்து மூன்றுநாள் சிசுவின் சடலமொன்று அழுகிய நிலையில் குப்பைக் கிடங்கொன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகச் சாவகச்சேரி பொலிசார் பெண் ஒருவரைச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர். சிசுவின் சடலம் யாழ். சட்டவைத்திய அதிகாரியிடம் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கைதடி மத்தியில் நடைபெற்றுள்ளது.

கைதடி கிராமசேவையாளர் திரு. சின்னத்துரைக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவரே இச் சிசுவின் சடலத்தைக் கண்டுபிடித்தார். சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன்ட் சி. வடிவேலு இது சம்பந்தமாக விசாரணையை மேற்கொண்டார்.

இச்சிசுவினைப் பிரசவித்த தாய் எனச் சந்தேகிக்கப்படும் பெண் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரிடம் விசாரணை செய்தபோது தானே சிசுவின் தாயார் என்றும் சிசு இறந்து பிறந்தது என்றும் அதனால் தான் குப்பைக்குழியில் புதைத்ததாகவும் கூறினார்

சாவகச்சேரி நீதவான் திரு, என். யோகசிகாமணி இச் சிசுவின் பிணத்தை யாழ். சட்டவைத்திய அதிகாரிக்கு அனுப்பிவைத்து சிசு இறந்து பிறந்ததா அல்லது பிறந்தபின் கொல்லப்பட்டதா என்பது பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோருமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (கு)

## பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்கிழமை காலை யாழ். பல்கலைக்கழகத்தில் கூடவுள்ளனர்.

தொடர்ந்து விரிவுரைகளுக்குச் செல்லாதிருப்பதால் ஏற்படும் பிரச்னைகள் குறித்து இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்வதாக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை பேராதனை, மொரட்டுவை பல்கலைக்கழகங்களின் 1ம், 2ம் வருட பொறியியற்பீட மாணவர்கள் தங்களுடைய கல்வியை லண்டன் நிறுவனங்களின் ஊடாகப் பயில்வது குறித்து ஆராய்வதற்காக நாளைக் காலை யாழ். பல்கலைக்கழகத்தில் கூடுகின்றனர். (கு)

## தன்னைத்தானே....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

யாழ். சட்டவைத்திய அதிகாரி திரு.எஸ். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலயப் பொறுப்பதிகாரி பிறில்லி அபசிங்க, சப் இன்ஸ்பெக்டர் பெரேரா, சார்ஜன்ட் எஸ். சுந்தரநாதன், கான்ஸ்டபிள்கள் எஸ். ஜீவராசா, ரி. தனபாலசிங்கம் ஆகியோர் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

விமானப் படையைச் சேர்ந்த சார்ஜன்ட் விஜயசேகர சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

''நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11-30 மணியளவில் நான் கடமையிலிருந்தவர்களை மேற்பார்வைசெய்தேன். வித்தாரணகே ரணசிங்க ரொட்றிகோ குருநாகலைச் சேர்ந்தவர். வயது 21. விமானப்படையில் பொறியியல் பகுதியில் கடமையாற்றுபவர். அன்றிரவு பாதுகாப்புக் கடமையிலிருந்த இவர், நான் பார்த்தபொழுது நித்திரையில் இருந்தார். இவருக்கு அண்மையில் கடமையிலிருந்த இரு வீரர்களை அழைத்து நித்திரையிலிருந்தவரைச் சுட்டிக்காட்டினேன். அவரிடமிருந்த எஸ். எல். ஆர் சப் மெஷின்கண் துப்பாக்கியை எடுத்து மற்ற இருவரிடமும் கொடுத்து விட்டு, அவரைத் தட்டி எழுப்பி எச்சரிக்கை செய்தேன். உடனே தமது இயந்திரத் துப்பாக்கியைப் பறித்து தனது இடதுபக்க நெஞ்சுக்கு நேரே வைத்துச் சுட்டார். பின்னர் நிலத்தில் விழுந்ததும் அவர் இறந்துவிட்டார். அவரது சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்று பிரேத அறையில் விசாரணைக்காக வைத்தோம். இவர் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கி 30தடவைகள் தொடர்ச்சியாக இயங்கக் கூடியது''

இறந்தவரின் உடலில் 3காயங்கள் காணப்பட்டன.. இரு துப்பாக்கிக் குண்டுகள் நெஞ்சைத் துளைத்து வெளியேறியதால் மரணம் ஏற்பட்டதென்று பிரேத பரிசோதனையின் பின்னர் தெரிவிக்கப்பட்டது. மற்றையகாயம் துப்பாக்கிக்குண்டு வெடித்து நெஞ்சின் மேற் பக்கத்தால் உரசிச் சென்றுள்ளது.

சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையைக்கொண்டு மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (மா)

## இன்று தி.மு. க....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காகஇன்றுகூடவுள்ளனர். இத்தகவலை தி. மு. க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தமிழர்அண்மைக் கலவரங்களில் பாதிக்கப்பட்டதைத்தொடர்ந்து தி. மு. க. சட்டமன்றத்தலைவர் திரு. கருணாநிதி எம். எல். ஏ. பதவியை ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து இப்பதவி காலியாக இருந்தது (சூ)

## ஆயுதப் பயிற்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலங்களில் கூறிவருகின்றன. இச்செய்தி உண்மைக்குப் புறம்பானது, எதுவித ஆதாரமற்றது. தமிழ்நாட்டின் எப்பகுதியிலும் யாரும் அவ்வாறு பயிற்சி பெறவில்லை'' என்றார். (சூ-கு)

## வடக்கில் புலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசா பாராளுமன்றத்தில் அவசர காலச்சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இப்படிக்கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணி பிரிவினைக் கொள்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதால், அரசாங்கம் அதனுடன் பேச்சுவார்த்தை நடத்தாது.

தமிழர் பிரச்னைபற்றி ஆராய்வதற்காக ஜனாதிபதியால் கூட்டப்பட்ட வட்டமேசை மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டு, அதில் கலந்து கொள்ளாத கட்சிகள் தமிழர்விடுதலை கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டணியின் முடிவை எமக்கு அறியத்தரலாம்

''தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வுகாணுவதற்கான சகல முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துவருகிறது.

''நாட்டில் இடம்பெற்றுவரும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும் அரசு உறுதி பூண்டுள்ளது'' என்றார்.

# அனாதரவான நிலையில் கடத்தப்பட்ட கார்!

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் வெளியில் வைத்து துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டகார், நேற்றுக்காலை அராலி அம்மன் கோவில் அருகில் அனாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு மயில்வாகனம் சிவச்சந்திரபோஸ் என்பவர் சி. ஜெகநாதனுடன் காரில் வட்டுக்கோட்டை நோக்கி சென்று கொண்டிருந்தபோது, கல்லுண்டாய் வெளியில் 3 இளைஞர்கள் இன்னொரு காரை முன்னால்விட்டு தடுத்து நிறுத்தினார்களாம். கைத்துப்பாக்கியைக்காட்டி காரைத் தரும்படி கேட்கவே. வட்டுக்கோட்டைக்குப் போவதாக சாரதிதெரிவித்தாராம். மூன்று இளைஞர்களும் அவர்களையும் கொண்டுசென்று வட்டுக்கோட்டை சந்தியில் இறக்கிவிட்டு காரைபத்திரமாகத் திருப்பித் தருவோம் என்று சொல்லி கொண்டு சென்றனர்.

இக்கார் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. காரில் கைவிரலடையாளங்களும் பொலிசாரால் பதிவு செய்யப்பட்டன, (மா-கு)

# ஞானப்பிரகாசர் நூற்றுண்டுவிழா ஆயத்தகூட்டம்

(யாழ்ப்பாணம்)

''புனித ஞானப்பிரகாசியார் நூற்றுண்டுவிழா', ஆயத்தக் கூட்டம், யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் இன்று மாலை யாழ். ஆயர் வணபிதா தியோகுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

# சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் வட்டுக்கோட்டை லையன்ஸ்கழக ஆதரவுடன் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை இன்று காலை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கொண்டாகிகுறது.

# நல்வாழ்விற்கு சகலமத பிரார்த்தனை

(வேலணை)

இலங்கைவாழ் சகல இன மக்களின் அமைதியான நல்வாழ்விற்கும் அமோக விளைவுப் பெருக்கத்திற்குமான சமயப் பிரார்த்தனை ஒன்று இன்று வேலணையில் நடைபெறவுள்ளது.

வேலணை கமநலச் சேவை நிலையத்தில் வேலணை பயிற்ச் செய்கைக் குழுத்தலைவர் நா. பிரணவசெரூபன் தலைமையில் நடைபெறவிருக்கும் இப் பிரார்த்தனையில் சைவ சமய பிரார்த்தனையை நா.குழந்தைவேலுவும் கிறீஸ்தவ பிரார்த்தனையைவண பிதா லோறன்ஸ் சேவியரும், இஸ்லாமியப் பிரார்த்தனையை ஜனாப் மு.க. முகதீன் பிச்சையும் பௌத்தத்தைப்பற்றி திரு. அ. ச. முருகேசுவும் நிகழ்த்தவிருக்கின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கமநலச் சேவைகள் உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் ஆகியோர்களும் கலந்து கொள்கின்றனர். (கு)

# பொலிஸ் பகுதியில் பதவி உயர்வு பெற்ற தமிழர்!

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் சார்ஜன்டுகளாக இருந்து சப் இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்வுபெற்ற 42 பேரில் இருவர்மட்டுமே தமிழர்கள். கான்ஸ்டபிள்களாக இருந்து சார்ஜன்டுகளாகப் பதவி உயர்வுபெற்ற 33 பேரில் மூன்று தமிழர்கள் இடம்பெற்றுள்ளனர்.

வைத்திலிங்கம் (யாழ். பொலிஸ் நிலையம்), ஆறுமுகம் (இரகசிய பொலிஸ் பிரிவு) ஆகிய இரு தமிழர்களுக்குமே சப் இன்ஸ்பெக்டர் பதவிகள் கிடைத்துள்ளன.

எஸ். ஜோர்ஜ் (யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு), ரட்ணராஜா (சுன்னாகம் பொலிஸ் நிலையம்), ராஜேந்திரன் (கொழும்பு பொலிஸ் நிலையம்) ஆகிய மூவருமே பொலிஸ் சார்ஜன்டுகளாகப் பதவியுயர்வுபெற்றுள்ளனர். (மா)

## கலவர நிகழ்வுகளை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யிடப்பட்டது? அரசின் உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிடப் படுவதற்கு முன்னரே பௌத்தநாடு என்று கூறப்படும் இந்நாட்டில் என்ன நடந்தது என்பதை உலகம் உலகம் தனது சொந்தக் கண்களினால் பார்த்தும் காதுகளினால் கேட்டு விட்டது. உதாரணமாக மந்திரிகள், எம். பிக்கள் சட்டத்தைப் பேணும் அதிகாரிகள் ஆகியோர் கண்களின் முன்னிலையிலேயே இலங்கையின் வரலாற்றில் என்றுமே இடம் பெறாத இந்த வன்செயல்கள்நடைபெற்றுள்ளன. ஆனால் 5 நாட்கள் இடம் பெற்ற இந்தக் கலவரங்களின் போது கொள்ளையடித்தவரோ தீ வைத்தவரோ ஒருவராவது சுடப்படவோ கொல்லப்படவோ இல்லை.

## கூட்டணி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பது அர்த்தமற்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலமே தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள்'' என்றும் அவர் கூறினார். (கு)

கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனச்சாட்சியும் அக்கறையும் உள்ள சிங்கள அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நிலையான புனர்வாழ்வு நடவடிக்கைகள் பெருமைப்படக் கூடியனவே. இந்நடவடிக்கைகளுக்கு விரிவான பிரசாரங்கள் கொடுபட வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம்.

இதுபோன்ற புனர்நிர்மாண நடவடிக்கைகளை பாரபட்ச அரசுசார்பற்ற நிறுவனங்களே மேற்கொள்ள வேண்டும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Pape at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.